கரூர் மாவட்டம், பழையஜெயங்கொண்டசோழபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு. ப.வேல்முருகன்

ந.க.எண்.179/2023 நாள்.24.01.2024

பொருள்.– மனைப்பிரிவு அனுமதி – கரூர் மாவட்டம் – பழையஜெயங்கொண்டசோழபுரம் பேரூராட்சி – மகாதானபுரம் தெற்கு கிராமம் – சர்வே எண்.692/1A1B1 என்ற இடத்தில் 1.0694 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 28 குடியிருப்பு மனைகளுக்கு மனைப்பிரிவு அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை.–
1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் ROC No. E95S2V8Z/2023/TCPநாள். 11.06.2023 தேதிய கடிதம் மற்றும் அதே நாளிட்ட உத்தேச சாலை அமைப்பு வரைபட ஒப்புதல்
2. கிருஷ்ணராயபுரம் சார்பதிவாளர் அலுவலக பத்திரப்பதிவு எண். 4195/2023 நாள்.07.11.2023
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர். கரூர் அவர்களின் ROC No R0JNLOKU/2022/TCP நாள்.07.12.2023. தேதிய கடிதம் மற்றும் SWP/DTCP/Karur/Layout No.218/2023.
4. இப்பேரூராட்சி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள். 24.01.2024.

ஆணை:

கரூர் மாவட்டம், பழையஜெயங்கொண்டசோழபுரம் பேரூராட்சிக்குட்பட்ட மகாதானபுரம் தெற்கு கிராமம் சர்வே எண்.692/1A1B1 என்ற இடத்தில் 1.0694 ஏக்கர் பரப்பளவுள்ள மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் காணும் கடிதம் வாயிலாக உத்தேச சாலை அமைப்பு வரைபட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி மனைப்பிரிவு சாலை தார்சாலையாகவும், சாலைகளின் ஓரத்தில் வடிகால்களும், குடிநீர் குழாய்களும் அமைக்கப்பட்டு சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடமானது பார்வை 2ல் காணும் நன்கொடை ஆவண வாயிலாக பேரூராட்சிக்கு தங்களால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

சாலை அமைப்பு வரைபட ஒப்புதலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் தங்களால் பூர்த்தி செய்யப்பட்டதை பார்வை 3ல் கண்டுள்ள உத்தரவின்படி இம்மனை பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 4ல் காணும் பழையஜெயங்கொண்டசோழபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க இப்பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய காலியிடவரி,நூலக வரி, சான்று கட்டணம், ஆய்வுக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ரூ.168478 /– (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தி எட்டாயிரத்து நானூற்று எழுபத்தி எட்டு மட்டும்) தங்களால் செலுத்தப்பட்டுள்ளது. (செ.சீ.எண். 337/2024 – நாள். 24.01.2024)

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி–2 நாள்.20.10.2022 ன் படி அமைக்கப்பட்டுள்ள சாலை, மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் குழாய் போன்ற அடிப்படை வசதிகளை 5 ஆண்டுகள் அல்லது 60 சதவீத மனைகள் விற்பனை ஆகும் வரை இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக தங்கள் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 28 குடியிருப்பு மனைகளுக்கும் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது. இத்துடன் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

செயல் அலுவலர்,
பழையஜெயங்கொண்டசோழபுரம் பேரூராட்சி,
கருர் மாவட்டம்.

பெறுநர்

திருமதி. கே. சந்திரா, எண். 19/18A, பழையஜெயங்கொண்டம் வடக்கு குடித்தெரு, மகாதானபுரம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.

நகல்.–

1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மாவட்டம்
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கிருஷ்ணராயபுரம்